1990 மார்ச் 22]

தனியார்கள் கையிலே சிக்கிக் கொண்டு இருக்கின்றன. அவற்றை மீட்பதற்கு இந்தக் கூட்டத் தொடரிலேயே சட்டத் திருத்தம் கொண்டு வர ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இராமநாதபுரம், சிவகங்கை தேவஸ்தானத்திற்கு உட்பட்ட கோவில்களை அறநிலையத்துறை எடுத்துக்கொள்ளும் திட்டம்.

*5929—திரு. எஸ். எஸ். தென்னரசு: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராமநாதபுரம் சிவகங்கை தேவஸ்தானத்திற்கு உட்பட்ட கோவில்களை அறநிலையத்துறை எடுத்துக்கொள்ளும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை சமஸ்தானத்தைச்சேர்ந்த கோவில்கள் இந்து சமய அறநிலையத் துறையின் ஆளுகையின் கீழ் உள்ளன. பரம்பரை அறங்காவலர்கள் அங்கு நிர்வாகப் பொறுப்பில் இருக்கிறார்கள்.

திரு. எஸ். எஸ். தென்னரசு: பேரவைத் தலைவர் அவர்களே அமைச்சர் அவர்கள் பல கேள்விகளுக்கு பல விளக்கங்களை அளித்திருக்கிறார்கள். நான் குறிப்பிடுகிற இரண்டு சமஸ்தானங்களில் சிவகங்கை சமஸ்தானத்திற்கு 27 கோவில்களும், இராமநாதபுரம் சமஸ்தானத்திற்கு 30 கோவில்களும் இருக்கின்றன. இப்போது அவற்றை அரசு வம்சம் கண்காணித்து வருகிறது. அவற்றினுடைய வருமானங்கள் எல்லாம் எந்த அளவுக்கு அரசுக்குப் பயன்படுகின்றன? வருமானம் அரச வம்சத்திற்கு போவதனாலே கோவில்களிலே உண்டியல் போடுவது பொது மக்கள் மத்தியிலே, கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து வருகிறது. திருவாடனையில் இருக்கக்கூடிய பெரிய ஆலயம், காளையார் கோவிலில் இருக்கக்கூடிய பெரிய ஆலயம், நாட்டரசன்கோட்டையில் இருக்கக்கூடிய பெரிய ஆலயம், திருக்கோச்சூரில் இருக்கக்கூடிய பெரிய ஆலயம் இவை அனைத்தும் புகழ் பெற்றவை. இப்போது ராணிகள் வசம் இருப்பதால் அவற்றை அரசாங்கம் நேரிடையாக ஏற்றுக்கொண்டு அரசாங்கமே அறங்காவலர்களை நியமிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, சிவகங்கை சமஸ்தானத்திலே மொத்தம் 83 திருக்கோவில்களும், 23 அறக்கட்டளைகளும் உள்ளன. அதேபோல இராமநாதபுரம் சமஸ்தானத்தில் 45 திருக்கோவில்களும் 9 அறக்கட்டளைகளும்

உள்ளன. நான் ஏற்கெனவே சொன்னது போல இந்த இரண்டு சமஸ்தான திருக்கோவில்களிலும் பரம்பரை அறங்காவலர்கள் இருக்கிறார்கள். சட்டத் திருத்தம் கொண்டு வருவதன் மூல மாகத்தான் அங்கே அரசு அறங்காவலர்களை நியமிக்க முடியும். அதற்கான நடவடிக்கை விரைவிலே எடுக்கப்படும். இந்தக் கோவில்களுடைய வருமானத்தை எந்த வகையிலேயும் அரசுக்கு பயன்படுத்த முடியாது. ஆனால் கோவில்களுக்குப் பயன்படுத்த முடியும். அங்கே உள்ள வருமானத்தைக் கொண்டு கோவில் களிலே திருப்பணி செய்து, கோவில்களைச் சீரிய முறையில் நடத்துவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

9-35 மணி

திரு. எஸ். எஸ். தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்டியல் உடைக்கின்றபோது, அரசு அலுவலாளர்கள் அங்கே வருகிறார்களா? இதுவரைக்கும் அப்படி வந்ததாக, அந்தப் பகுதியிலே பேச்சு இல்லை. இனி மேலாவது, அதை அரசு கண்காணிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, சிவகங்கை சமஸ்தானக் கோவில்களைப் பொறுத்த மட்டிலே, அங்கே ஒரு நீதிமன்ற 'ஸ்கீம்' இருக்கின்றது. அதன்படி, அந்தக் கோவில்களுக்கு மேனேஜர் என்ற முறையில் அறங்காவலராக ஒருவரை நியமிக்க முடியும். அதைப்போல இராமநாதபுரம் சமஸ்தானத்திற்கும். இவைஎல்லாம்அறநிலையத்துறையினுடைய கட்டுப்பாட்டிற்குள்ளேதான் இருக்கின்றன. உண்டியல் உடைப் பது பற்றியும் அங்கே உண்டியல் பணம் எல்லாம் ஒழுங்காகக் கணக்கு எழுதப்படுவது பற்றியும் இங்கே உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நானும் வருகின்ற 6-ஆம் தேதி அந்தப் பகுதியிலேயுள்ள சில கோவில்களைப் பார்க்க இருக்கின்றேன். பார்த்த பிறகு, நிச்சயமாக என்னென்ன தவறான முறைகள் அங்கு இருக்கின்றனவோ அவற்றைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

பயிர்க் கடன்

*3891 டாக்டர் க.காஞ்சனா

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தருமபுரி மாவட்டத்தில் கூட்டுறவு வங்கிகளின் மூலம் அளிக்கப்படும் பயிர்க் கடனில் அதிக அளவு உரமும், குறைந்த அளவு பணமும் தரப்படுவதை அரசு அறியுமா?